இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 14.11.2026

அடிதடி துணை சபாநாயகரும் - ஆபாச எம்.எல்.ஏ.வும்

ஆறு மாத விஜய் ஆட்சிக்கு மகுடம் வைப்பதைப் போல இரண்டு சம்பவங்கள் நடந்துள்ளன.

ஒன்று: அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி மனுக் கொடுக்க வந்தவரை அடி அடி என்று அடித்துள்ளார் துணை சபாநாயகர் ரவிசங்கர். துறையூரைச் சேர்ந்த கார்த்திக், தனது 23ஆவது வார்டில் இருக்கும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து துறையூர் எம்.எம்.ஏ.வான ரவி சங்கரைச் சந்தித்து மனுக் கொடுக்க வந்துள்ளார். ரவி சங்கருக்கு முதலில் போன் செய்கிறார். அவர் எடுக்கவில்லை என்றதும் நேரில் வந்துள்ளார். கார்த்திக்கை அடிக்கிறார் துணை சபாநாயகர். 'நான் விஜய்க்காக வோட்டுப் போட்டவன்' என்று கதறுகிறார் கார்த்திக். அதன் பிறகும் அடிக்கிறார் ரவிசங்கர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆனது.

உடனே கார்த்திக்கை அழைத்து சமாதானம் செய்கிறார் துணை சபாநாயகர். 'துணை சபாநாயகரை சந்திக்கச் சென்றபோது கூட்ட நெரிசலில் தவறி விழுந்துவிட்டேன். என்னை யாரும் தாக்கவில்லை' என்று கார்த்திக் சொல்வது போல வீடியோ வெளியானது.

அதன்பிறகு உண்மையைச் சொல்லி விட்டார் கார்த்திக். "என்னை மிரட்டித்தான் துணை சபாநாயகர் ரவிசங்கர் அப்படிச் சொல்ல வைத்து வீடியோ எடுத்தார். நான் சொன்ன மாதிரி பேசவில்லை என்றால் உயிரோடு விட மாட்டோம் என்று மிரட்டினார். என் உயிரையும் என் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ளவே அப்படிச் சொன்னேன்" என்று சொல்லி விட்டார் கார்த்திக்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர், அதுவும் தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் எப்படி இருக்கிறார் என்பதை நாடு பார்த்து தலைகுனிகிறது. இவரை இந்தப் பதவிக்கு நியமித்த போதே ஒரு புகைப்படம் இணையத்தில் வெளியானது. அது அதைவிடக் கேவலமானது.

இரண்டு: கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பி இருக்கிறார் கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ., அருள் விக்னேஷ். இப்படி ஒருவரை சட்டமன்ற உறுப்பினராக வைத்துள்ளார் விஜய். 'அந்த மாவட்ட ஆட்சியர் புகார் தந்தால் நடவடிக்கை எடுப்போம்' என்கிறார் அமைச்சர் ராஜ்மோகன். தலைமைச் செயலாளருக்கு புகார் சொல்லப்பட்டுள்ளதாக அரசு அதிகாரிகள் மட்டத்தில் தகவல் சொல்லப்பட்டுள்ளது. அமைச்சர் ராஜ்மோகனிடம் நேரில் வந்து சொல்ல வேண்டுமா?

மனுக் கொடுக்க வந்தவரைத் தாக்கிய துணை சபாநாயகர் மீது என்ன நடவடிக்கை எடுத்தார் முதலமைச்சர் விஜய்? இதுவரை எதுவுமில்லை.

பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பிய த.வெ.க. எம்.எல்.ஏ., அருள் விக்னேஷ் மீது என்ன நடவடிக்கை எடுத்தார் முதலமைச்சர் விஜய்? இதுவரை எதுவுமில்லை.

நேற்றைய தினம் எம்.எல்.ஏ.க்கள் அனைவரையும் சென்னைக்கு அழைத்தார் விஜய். அதில் இவர்கள் இருவரும் இருந்தார்கள். அந்த இருவரையும் ஸ்டார் ஹோட்டலில் உட்கார வைத்து பட்டு வேட்டி சட்டை கொடுத்துள்ளார் முதலமைச்சர் விஜய். தீபாவளி வாழ்த்துச் சொல்லி இருக்கிறார் விஜய். இதுதான் ஒரு முதலமைச்சருக்கு அழகா?

குறைந்தபட்சம், அவர்களைச் சந்திக்க மறுத்தார், அவர்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை, பட்டுவேட்டி சட்டை தரவில்லை என்றாவது தனது கோபத்தைப் பதிய வைத்திருக்க வேண்டாமா? 'அட்வைஸ் செய்தார்' என்று செய்திகளைப் பரப்புகிறார்கள். விஜய் என்ன அறிவுரை செய்திருப்பார்? 'வாழ்க்கையில் ஒரு ஜாலி இருக்க வேண்டியதுதான், அதற்காக அதற்கு அடிமையாகி விடக் கூடாது' என்று சொல்லி இருப்பாரா?

யாரையும் கேள்வி கேட்கும் நிலைமையில் விஜய் இல்லை என்பதுதான் உண்மை. யார் மீதும் நடவடிக்கை எடுக்கும் நிலைமையிலும் அவர் இல்லை. எந்தவொரு எம்.எல்.ஏ. கோபித்துக் கொண்டாலும் ஆட்சி கவிழ்ந்து போகும்.

'பவுடர்' அமைச்சர் சரத்குமார் மீது இதுவரை நடவடிக்கை இல்லை. விஜய் ரசிகையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி சிக்கிய திருவைகுண்டம் எம்.எல்.ஏ., சரவணன் மீது நடவடிக்கை இல்லை. 'ஜட்டியைக் கழற்றி உட்கார வைத்து விடுவேன்' என்று சொந்தக் கட்சிக்காரர்களை போனில் மிரட்டிய அமைச்சர் ஜெகதீஸ்வரி மீது நடவடிக்கை இல்லை. மின்சாரக் கொள்முதலில் விளையாடி வரும் அமைச்சர் நிர்மல் குமார் மீது நடவடிக்கை இல்லை. 'அரசு வக்கீல் நியமனத்தில் ஊழல்' என்று குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள் இருவர் மீது நடவடிக்கை இல்லை. கட்சிப் பெண்களை வளைப்பதாக ஆடியோ லீக் ஆன அமைச்சர் மீது நடவடிக்கை இல்லை. 'போதை மருந்து கடத்தலில் முக்கியப் புள்ளி' என்று சொல்லப்படுகிறவர் மீது நடவடிக்கை இல்லை. 100 கோடி நில மோசடியில் சிக்கிய அமைச்சர் ரமேஷ் மீது நடவடிக்கை இல்லை. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இவர்கள் எவர் மீதும் விஜய்யால் நடவடிக்கை எடுக்க முடியாது.

இந்த வரிசையில் துணை சபாநாயகர் ரவிசங்கர் மீதும் விஜய்யால் நடவடிக்கை எடுக்க முடியாது. கள்ளக்குறிச்சி அருள் விக்னேஷ் மீதும் நடவடிக்கை எடுக்க முடியாது. இத்தகைய மனிதர்கள் தயவால்தான் அவர் முதலமைச்சராக இருக்கிறார். **கேவலம். மகா கேவலம்.**



கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்களை, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி. ரவீந்திரநாத்தும் நேரில் சந்தித்து தங்கள் இல்லத் திருமண வரவேற்பு விழா அழைப்பிதழை வழங்கினர்.

மவுன முதலமைச்சருக்கு மனசாட்சி இருந்தால் தவறு செய்யும்

த.வெ.க.வினரை கட்டி வையுங்கள் - இல்லாவிடில் மக்கள் சக்தி தட்டி வைக்கும்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ.14- மவுன முதலமைச்சருக்கு மனசாட்சி இருந்தால் தவறு செய்யும் த.வெ.க.வினரை கட்டி வைக்க வேண்டும்; இல்லாவிடில் மக்கள் சக்தி தட்டி வைக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்கு தகாத message அனுப்பிய குற்றச்சாட்டில் த.வெ.க. MLA அருள் விக்னேஷை இந்த Dummy CM இன்னமும் பாதுகாப்பது ஏன்? கோரிக்கை வைத்தவரை அடித்து துன்புறுத்திய துணை சபாநாயகர் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்?

இது ஆட்சியா? இல்லை, த.வெ.க-வினர் அத்துமீறுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் அலங்கோல syndicate-ஆ?

Dummy CM-க்கு, தப்பு செய்யும் தன் கட்சிக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க துணிச்சல் இல்லை.

ஆனால், அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டம் - த.வெ.க MLA-க்களுடன் ஆலோசனைக் கூட்டம் என்று வேக வேகமாக Diversion politics-ல் இறங்குகிறார்.

ஆலோசனைக் கூட்டத்தில், அனல் கக்கினார் - அக்கினி குழம்பை அள்ளி ஊற்றினார் என்று Online Mafia-வையும், Paid பேர்ல்லா பிச்சைகளையும் வைத்து Reels ஓட்டினால் மக்கள் மறந்துவிடுவார்களா?

மவுன முதலமைச்சருக்கு மன சாட்சி இருந்தால் தவறு செய்யும் உங்கள் கட்சிக்காரர்களை கட்டி வையுங்கள். இல்லை மக்கள் சக்தி தட்டி வைக்கும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

மதுரையில் துணிகரக் கொள்ளை!

ரூ.50 கோடி மதிப்பிலான ஆபரணம் உள்ளட 35 கிலோ தங்கம் திருட்டு!

மதுரை, நவ.14 -

மதுரையில் திறந்து 15 நாட்களேயான நகைக் கடையில் 35 கிலோ தங்கம் உள்ளிட்ட விலை உயர்ந்த நகைகள் கொள்ளை போயுள்ளன. இதன் மதிப்பு சுமார் 50 கோடி இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

இதுபற்றிய விவரம் வருமாறு:-

மதுரை பைபாஸ் சாலையில் உள்ள பிரபல Tanishq நகைக் கடையில் சுமார் 35 கிலோ தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு முகமூடி அணிந்த மர்ம நபர் ஒருவர் கடையின் பின்பக்க வழியாக உள்ளே புகுந்து நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றதாக முதற் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொள்ளை போன நகைகளின் மதிப்பு சுமார் 50 கோடி ரூபாய் இருக்கும் எனக் கூறப்படுகிறது. இந்த நகைக்கடை திறக்கப்பட்டு சுமார் 15 நாட்களே ஆகும் நிலையில், இதுவரை பெரிய அளவில் திறப்பு விழாவும் நடத்தப்படவில்லை. மேலும், கடையின் உள்புறப் பணிகளும் முழுமையாக நிறைவடையாத நிலையில் இந்த கொள்ளை சம்பவம் நடைபெற்றுள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த எஸ்.எஸ். காலனி காவல்துறையினர் மோப்பநாய் உதவியுடன் விசாரணை மேற்கொண்டனர். தடயவியல் நிபுணர்களும் சம்பவ இடத்தில் ஆய்வு செய்தனர்.

கடையில் இருந்த மொத்த தங்கத்தின் அளவில் சுமார் 30 சதவீதம் திருடு போயுள்ளதாக கூறப்படுகிறது.

நகைக் கடையில் நுழைந்த முகமூடி கொள்ளையன்!

இந்த கொள்ளை குறித்து கடையின் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த போது ஒரு கொள்ளையன் முக மூடி அணிந்தபடி மூட்டை மூட்டையாக நகைகளை அள்ளிச் சென்றது தெரிய வந்தது.

கற்கள் பதித்த நகைகளாக இருந்தால் விற்பனை செய்தால் பணம் குறைவாக கிடைக்கும் என்பதால் கற்கள் பதிக்காத நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளான். இந்த கொள்ளையனை பிடிக்க 9 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இரும்பு சாரத்தில் ஏறி மொட்டை மாடி ஜன்னல் வழியாக வந்த கொள்ளையன், லிப்ட்டை தாங்கும் இரும்பு கம்பிகளை பிடித்துக் கொண்டு கடையின் தரைதளத்திற்கு வந்துள்ளனர். அங்கிருந்த நகைகளை அள்ளிக் கொண்டு நேதாஜி மெயின் ரோடு வழியாக தப்பி இருக்கலாம் என்று காவல்துறையினர் சந்தேகப்படுகின்றனர்.

அது போல் சில நகைகளை எடுத்தால் சைரன் ஒலி எழுப்பும். அது போல் சைரன் ஒலி எழுப்பாத நகைகளை மட்டுமே அந்த கொள்ளையன் கொள்ளையடித்துச் சென்றுள்ளார். இதனால் நன்கு தெரிந்த நபர்தான் இந்த கொள்ளையில் ஈடுபட்டிருப்பார் என போலீஸார் சந்தேகிக்கிறார்கள்.

இந்த கடையில் பிளம்பிங், எலக்ட்ரீஷியன் உள்ளிட்ட பணிகளை செய்த வர்களை அழைத்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அது போல் கடையில் பணியாற்றும் 25 ஊழியர்களிடமும் விசாரணை நடத்தப்படுகிறது. அது போல் அவர்களின் கைவிரல் ரேகைகள் சேகரிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

முல்லைப்பெரியாறு அணையில் - துணைக் கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு!

தேனி, நவ.14–

தமிழக – கேரள எல்லையில் உள்ள முல்லைப்பெரியாறு அணையில் துணைக் கண்காணிப்புக் குழுவினர் ஆய்வு மேற் கொண்டு வருகின்றனர்.

தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக முல்லைப் பெரியாறு அணை திகழ்ந்து வருகிறது. தமிழக கேரள எல்லையில் உள்ள முல்லைப்பெரியாறு அணையைக் கண்காணிக்க தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் அனில் ஜெயின் தலைமையிலான மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வைக் குழுவிற்கு உதவியாக, முல்லைப்பெரியாறு அணைக்குத் துணைக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அணைகள் பாதுகாப்பு ஆணையத் தென் மண்டல இயக்குநர் கிரிதரன் தலைமையிலான துணைக் குழுவினர், கடந்த ஆகஸ்ட் மாதம் அணையில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று தேக்கடி படகுத்துறையிலிருந்து படகின் மூலம் சென்ற ஆய்வுக்குழுவினர், பிரதான அணை, சிற்றணை, அணைக்கு வரும் நீர்வரத்து, நீர்க்கசிவு, மதகுகளின் இயக்கம் மற்றும் கேலரிப் பகுதிகளை ஆய்வு செய்தனர்.

இதனிடையே, அணையின் நீர் மட்டம் 122 அடியாகவும், நீர்வரத்து 635 கன அடியாகவும் உள்ளது.

மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பங்கேற்காத கள்ளக்குறிச்சி கலெக்டர்!

முகாம் அலுவலகத்திலேயே பணிகளை மேற்கொண்டார்!

கள்ளக்குறிச்சி, நவ.14-

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் பத்மஜாவுக்கு கள்ளக்குறிச்சி த.வெ.க. எம்.எல்.ஏ. அருள்விக்னேஷ், தனது செல்போனில் இருந்து சர்ச்சைக்குரிய வகையில் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக புகார் எழுந்தது. இந்த தகவல் சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு பல்வேறு அரசியல்கட்சியினரும் எதிர்ப்பு தெரிவித்து, கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கல்வராயன்மலையில் உள்ள கிளாக்காடு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நேற்று முன்தினம் கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் பத்மஜா தலைமையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்திருந்தது. மேலும் அதற்கான முன்னேற்பாடு பணிகளும் நடைபெற்றன.

ஆனால் நேற்று முன்தினம் நடந்த முகாமில் மாவட்ட கலெக்டர் பத்மஜா பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவா கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கலெக்டர் பத்மஜா நேற்று கலெக்டர் அலுவலகத்திற்கும் செல்ல வில்லை. மாறாக தனது முகாம் அலுவலகத் திலேயே இருந்து அலுவலக பணிகளை மேற்கொண்டார்.



சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரங்கில் உச்சநீதிமன்ற நீதியரசர் திருமதி. வி.மோகனா முன்னிலையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் சுமார் 4,700 வழக்கறிஞர்கள் தங்களை வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து உறுதிமொழி ஏற்கும் நிகழ்வில் கலந்துகொண்ட உச்சநீதிமன்ற நீதியரசர் திருமதி. வி. மோகனா அவர்களுக்கு கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி. நினைவுப் பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, என். சதீஷ் குமார், முத்துக்குமார் மற்றும் தமிழ்நாடு & புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.